மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான்; மக்களுக்காக நான்' என்று வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாளை பிறந்த நாள். தமிழகத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை என்றாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.*

இந்த விளையாட்டு மைதானம் 2001-ல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தொடங்கப்பட்டது. மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அதைச் சீரமைத்துக் கொடுக்க முன்வந்த, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

சமுதாயக் கூடம்

***26848—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலஉரப்பனூர், இந்திரா காலனி, கங்குராண்பட்டி ஆகிய கிராமங்களில் தாட்கோ மூலமாக சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாளை 24-2-2015-ல், 67-வது பிறந்த நாள். நாளை பிறந்த நாள் காணும், நான் நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்த வயதின்றி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி, எனது பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலஉரப்பனூர், இந்திரா காலனி மற்றும் சங்குராண்பட்டி ஆகிய கிராமங்களில் சமுதாயக் கூடம் கட்டத் தேவையான இடமிருப்பின், நிதிநிலைமைக்கேற்ப மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் நல்லரசு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று மக்களின் முன்னேற்றத்தையே மையமாகக் கொண்டு, தன் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்டு, தமிழக மக்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் நம்முடைய மக்களின் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 67-வது பிறந்தநாள் விழாவில், நீண்ட ஆயுளும், மக்களுக்காக உழைக்கக்கூடிய உடல் திறனும் பெற்று, இந்த மாமன்றத்தில் மீண்டும் முதலமைச்சராக வந்து அமர வேண்டுமென்று, (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி தமிழ் மக்களெல்லாம் பிரார்த்திக்கின்ற அந்தப் பிரார்த்தனைகளில், நானும், என் குடும்பத்தாரும்; திருமங்கலம் தொகுதி மக்களுடைய குடும்பத்தாரும் சேர்ந்து பிரார்த்தனையைச் செய்கிறோம்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமங்கலம் ஒன்றியம், மேலஉரப்பனூர்,

இந்திரா காலனி, வடகரை ஊராட்சியிலுள்ள சங்குரான்பட்டியில் அதிகமான ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், அவர்கள் சிறிய விசேஷங்கள் செய்ய வேண்டுமென்றாலும், மிகவும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். அந்தப் பகுதிகளிலே அரசுப் புறம்போக்கு நிலங்களைக் கண்டறிந்து, அங்கே ஒரு சமுதாயக் கூடம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டில் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் 2013-2014 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில், கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூர் கிராமத்தில் ரூ.15 இலட்சம் செலவில் சமுதாயக் கூடம் கட்டப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து மாவட்டங்களிலும் சமுதாயக் கூடம் வேண்டி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றுள்ளன. ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு எல்லா மாவட்டங்களிலும் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க இயலாத நிலை உள்ளது. இருப்பினும், மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேலஉரப்பனூர், இந்திரா காலனி, சங்குரான்பட்டி ஆகிய கிராமங்களில் சமுதாயக் கூடம் கட்ட ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையின் முக்கியத்துவம், சமுதாயக் கூடம் கட்ட இடவசதி ஆகியவை இருப்பின், நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்டித் தர மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் நடைபெறுகின்ற இந்த நல்லரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூரில் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலுடன் திருமண மண்டபம் கட்டப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலேயே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு நான் குறிப்பிட்டிருக்கின்ற மேலஉரப்பனூர், இந்திரா காலனி, சங்குராண்பட்டி ஆகிய கிராமங்களில் ஏதாவது ஒன்றில் வரும் நிதியாண்டில் சமுதாயக் கூடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதுமே ஏழை, எளிய, அடித்தட்டு மக்களின் தேவை அறிந்து, அவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றிடும் விடிவெள்ளியாகத் திகழ்பவர். எனவே, மாமன்ற உறுப்பினர் குறிப்பிடும் இடத்தில், அங்கு வசிக்கும் மக்கள்தொகை எண்ணிக்கை மற்றும் இடவசதி இருப்பின், நிதிநிலைமைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இந்தப் புனித அரசு அங்கு சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

திரு. என்.எஸ்.என். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என நான் குறிப்பிட்டுள்ளதை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**உறுப்பினர் திரும்பப்பெற்றுக்கொண்டதால் அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஏற்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

மீன் இறங்குதளம்

***42958—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் காலனி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கத்தில் திருமுகம் காட்டாமலேயே முத்திரை பதித்திட்ட தாயே, விழி அசைவில் விஸ்வரூப வெற்றியைப் பெற்றுத் தந்த வெற்றிச் செல்வியே, திரும்பிய திசை யாவும் வெற்றிக் கொடியேற்றி வரும் எங்கள் திருவரங்கத்துத் திருமகளே, (மேசையைத் தட்டும் ஒலி) இடர்களையும், தடைகளையும் தகர்த்தெறிந்து, இமயம்போல் உயர்ந்து, மீண்டும் அரியாசனம் ஏறும் அரிமா தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) நாளை பிறந்தநாள் காணும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, எங்கள் ஆயுளையும் சேர்த்து, நீண்ட நோயில்லா ஆயுளைக் கொடுக்க இறைவனை வேண்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் காலனி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு *உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*